பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.46/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) பேரவை அலுவல்

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்): அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்றைக்கு நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கிணங்க பேரவையின் சட்டம் நாளை 12-5-81 அன்று பிற்கலிலும் கூடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(எ) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/1981).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 45/1981) ஆய்வுக்கு *எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்'' என்று மொழிகிறேன்.

*திரு. சே. கலிதீர்த்தன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, நாவலர் அவர்களால் இன்றைய தினம் சமர்ப்பிக்கப்பட்ட எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன் வடிவின் மீதான விவாதத்தின் பொழுது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது நம்முடைய புரட்சித் தலைவரவர்களுடைய அரசு ஏற்பட்டதிலிருந்து அப்பொழுதும் சரி, இப்பொழுதும் சரி, அப்பொழுது புயலும் வெள்ளமும் ஏற்பட்டும், இப்பொழுது வறட்சியும் ஆக இத்தனை சங்கடமான சூழ்நிலைகளைச் சமாளித்து பொதுமக்களுக்குத் தொந்தரவு இல்லாமல் பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அப்படிச் செயல்படுத்தி வரும் பொழுது இங்கே உள்ள அனைத்து உறுப்பினர்களும் அறிவார்கள். இதற்குமுன் இருந்த அரசுகளெல்லாம் செய்த அவ்வளவு பெரிய கெடுபிடிகளையோ, வேறுவிதமான கடுமையான காரியங்கள் எதுவுமோ நம்முடைய புரட்சித் தலைவரவர்களுடைய அரசிலே செய்தது கிடையாது என்பதையும் நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

---

* 1981 ம் ஆண்டு மே மாதம் 9ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.